ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
பாலா
விளம்பரம்
கௌரி - சிந்து
அச்சு
குமார் (ஜேர்மனி)
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# மதங்கொத்திகளிடம் கவனமாயிருக்க வேண்டுகிறேன்

**சற்று மாறுதலுக்காக**

எழுதுவது: **சேயோன்**

அன்று முழுநாளும் இலண்டன் நகரம் பனிப்புகாரால் சூழப்பட்டிருந்தது. பத்தடியில் நிற்போர் கூட மங்கித் தெரிகின்ற அளவு கடும் பனிப்புகார். அந்த ஞாயிறு தினம் மதியம் என் ஊரார் ஒருவரின் சாவிற்காக சுடலைக்குப் போக வேண்டி வந்தது.

அந்தச் சுடலையில் பல வெள்ளைக் காரர்களைப் பார்க்கிறேன். தமது உறவுகளின் நினைவுக்கு வணக்கம் செலுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். உறவுகளின் கல்லறையில் கொத்து கொத்தாகப் பூக்கள் வைத்து, மனம் உருகி அவர்கள் வணக்கம் செய்தபோது நெஞ்சைப் பிசைந்தது. அங்கிருந்த அனேகமான கல்லறைகளில் வாட்டமுறாத மலர்கள்தான் கொத்துக் கொத்தாகக் கிடந்தன. வாட்டமுறாத தற்குக் காரணம் குளிர் மாத்திரமல்ல. அந்தக் கல்லறைகளில் மிகக் கிட்டடியில்தான் வணக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிப் பார்க்கையில் மாதம் ஒருமுறை வந்தோ, அல்லது ஞாயிறு தோறும் வந்தோ வணக்கம் செய்வார்கள். அப்படித்தான் நான் நம்புகிறேன்.

இந்த இடத்தில் எங்கள் சமூகத்தை அல்ல என்னை எண்ணிப் பார்க்கிறேன். அம்மாவையும் அப்பாவையும் அவர் தம் நினைவையும் நான் போற்றுகிறேனா? வாரம் ஒருமுறையேனும் வணக்கம் செய்கிறேனா? திவசம் செய்வது, திதி செய்வது எல்லாம் ஒரு சடங்காக சம்பிரதாயமாகத்தான் எங்களிடம் இருக்கிறதேயொழிய அவர்கள் நினைவுக்கு வணக்கமாக அது இல்லை.

வெள்ளைக்காரர்கள் என்றால் எங்களிடம் இருக்கிற கருத்து என்ன? குடும்பப் பிணைப்பு இல்லாதவர்கள், அன்பு குறைந்தவர்கள், தம்முடைய வாழ்வை மாத்திரமே பார்ப்பவர்கள். இப்படிக் கேவலமான அபிப்பிராயங்களே இருக்கிறது. அதேசமயம் 'வெள்ளைக்காரர்' என்றால் மிக உயர்ந்தவர்கள் என்கிற அடிமை மனோபாவம் எம்மிடம் இருக்கிறது.

எல்லா சமூகங்களிலும் அதன் கலாசாரங்களிலும் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. எங்களுடையது தான் திறம் என்றோ, மற்ற வர்களுடையது தான் திறம் என்றோ எதுவும் இல்லை. அதற்காக மோசம் என்றும் அல்ல.

இந்தச் சிந்தனை என்னுள் ஊறியது இன்னொரு விசயத்தில் இருந்தும். என் ஊரவரின் சாவு என்று சொன்னேன் தானே. அவர் இறப்பதற்கு சில காலங்கள் முன்னரேயே மதம் மாறியிருந்தார். அவரது மனைவியும் மதம் மாறியிருக்கிறார். எந்த மதத்தில் இருந்து எந்த மதத்திற்கு மாறி யிருப்பார்கள் என்று நான் சொல்லி விளக்கத் தேவையில்லை. ஜேர்மனியில்தான் இந்த வருத்தம் பரவி முற்றிவிட்டது என்றால் இப்போது இலண்டனிலும் இந்த வருத்தம் பரவி விட்டது.

இந்த வருத்தம் ஏன் பரவுகிறது என்று காரணிகளை அடுக்க நான் விரும்பவில்லை. அது இங்கு தேவையும் இல்லை. இந்த வருத்தம் பரவுவது நம் சமூகத்திற்கு எவ்வளவு ஆபத்து என்று எடுத்துரைக்க நான் விரும்புகிறேன்.

எங்களுக்கென்றொரு குடும்பம் இருக்கிறது. எங்களுக்கென்றொரு சமூகம் இருக்கிறது. எங்கள் சமூகம் பல இன்னல்களால் அழிபடு கின்றது. டக்ளஸ், கருணா, சங்கரி என்ற எம் மினத்தைச் சேர்ந்த ஒடுகாலிகளே எம்மினத்தை அழிப்பதற்கு துணை போகின்றனர், முன்னிற்கின்றனர்.

தாயகத்தில் நம் இனம் இவ்வாறு அழிகின்ற தென்றால் புலம் பெயர்ந்த நாடுகளில் மதம் மாறும் வருத்தம் காரணமாக எம் சமூகம் சிதைகிறது, சீரழிவு நோக்கிச் செல்கிறது.

இந்து மதத்தவர்கள் தான் இப்படி மதம் மாற்றப்படுகிறார்கள். காரணம் என்ன? இவர்கள் தான் வயிரமான மரமாக இல்லாமல் சோத்தி யான மரமாக இருப்பவர்கள். இப்படியான மரங் களில்தான் மரங்கொத்தி இலகுவாகக் கொத்தும். இந்த 'மதங்கொத்தி'களும் இந்த சோத்தியான மதங்களைக் கொத்துகிறது.

இந்த மதங்கொத்திகள் ஏலுமென்றால் ஒரு இஸ்லாமியர் வீட்டுக் கதவைத் தட்டட்டும் பார்க்கலாம். ஒரு முஸ்லீம் மகனையோ, மகளையோ இயலுமென்றால் மதம் மாற்றிக் காட்டட்டும் பார்க்கலாம். இஸ்லாமிய வீட்டுக் கதவை இந்த மதங்கொத்திகள் தட்டினார்கள் என்றால் விழும் அடி, உதை.

**எல்லா சமூகங்களிலும் அதன் கலாசாரங்களிலும் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. எங்களுடையது தான் திறம் என்றோ, மற்றவர்களுடையது தான் திறம் என்றோ எதுவும் இல்லை.**

இந்துக்கள் தான் சோப்ளாங்கிகள். மானம், ரோசம் என்று எதுவும் இல்லாதவர்கள். எங்களுடைய அம்மாவை அம்மா என்று இல்லாமல் சும்மா என்று ஆக்கிவிட்டு எவனெ வனுடையோ அம்மாவை எங்கன்ர அம்மா என்று கோயில் கட்டிக் கும்பிடுபவர்கள்.

சிந்திக்க வேண்டிய தருணம் இது. இலண்டனில் மாத்திரம் ஒன்பதினாயிரம் ஈழத்துத்தமிழ் இந்துக்கள் இப்படி மதம் மாறியிருப்பதாக ஒரு குறிப்பு கூறுகிறது.

இப்படி மதம் மாறுகிறவர்கள் யார்? ஒன்று ஈழத்துத் தமிழர் மற்றது கறுப்பினத்தவர். இந்த இரண்டு சமூகம்தான் உலகில் மிகக் கேடுகெட்ட சமூகம் போல் இருக்கிறது இல்லையா? இங்கிலாந்திலேயோ, பிரான்ஸ்சிலேயோ, ஜேர்மனியிலேயோ உள்ள உண்மையான கிறிஸ்தவர்கள் கூட இந்த மதங்கொத்திகளிடம் அகப்படவில்லை. எங்களுடைய சமூகத்தைப் பார்க்க ஆக வெட்கமாக இருக்கிறது. என்னுடைய மகள் அம்மணமாக றோட்டில் ஓடியது போல.

இந்த மதங்கொத்திகளைக் கவனித்தால் ஒன்று தெரியும். நாலைந்து சொகுசு வாகனங்களை வைத்துக் கொண்டு உல்லாசமாக இருப்பார்கள். தேவ ஊழியம் செய்பவர்களுக்கு ஏன் உல்லாசம்? யேசுநாதர் மக்களுக்காக இரத்தம் சிந்தினார் என்றால் இந்த மத போதகர்கள் எதைச் சிந்துகிறார்கள்?

அவரவர் மதத்தில் அவரவர் இருங்கள். அதுவே ஆரோக்கியமான சமூகம்.

# நட்பு

**வள்ளுவர் காட்டும் வழி**

எழுதுவது: **இராம. கே. நாதன்**

இந்தத் தொடரில் நண்பர்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது. எப்படிப்பட்டவர்களை நண்பர் களாகக் கொள்ளுதல் வேண்டும் எனப் பார்த்தோம். உண்மையான நட்பு எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பதை வள்ளுவர் ஆழகாக எடுத்துரைத்துள்ளார்.

'உன் நண்பன் யார் என்பதைச் சொல். அப்போது நீ எப்படிப்பட்டவன் என்பதைச் சொல்லி விடுகிறேன்' என்பது ஒரு முதுமொழி.

ஒருவனுடைய நடத்தையிலும், வாழ்விலும் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஒருவனுடைய குடும்பத்திற்கு அப்பால் ஒருவனின் சுக துக்கங்களில் கூடுதலாக பங்கு கொள்பவர்கள் நண்பர்களே. என்வே அந்த நட்புறவு தூய்மையானதாக இருப்பின் சுயநலம் தேடாத நட்பாக இருப்பின் அந்த நட்பைப் போன்ற சிறந்த உறவு வேறொன்றும் இருக்கமுடியாது. ஏனெனில் அந்த நட்புறவைப் போன்று வேறெந்த உறவும் ஒருவனுக்கு பாதுகாப்பு அளிக்க முடியாததாகும். (குறள் 781).

அது மாத்திரமின்றி நற்குணமுடையோருக்கு நட்பு, வளர்பிறைபோன்று நாளுக்கு நாள் வளரும் தன்மையுடையது. ஆனால் அறிவீனர்களுடைய நட்போ தேய்பிறை போன்று நாளடைவில் தேய்ந்து மறைந்து போய்விடும். (குறள் 782)

பண்புடையார்களுடன் மேற்கொள்ளும் நட் பானது ஒரு நல்ல நூலைப் படிப்பது போன்ற தொன்றாகும். ஏனெனில் ஒரு நல்ல நூலைப் படிக்கப்படிக்க அது சுவைதரும். பல கோணங் களில் அதன் கருத்துக்கள் வெளிப்படும். மேலும் மேலும் அறிவைத் தரும். இதைப்போன்றதே பண்பாளர்களின் நட்பும். அது பழகப் பழக மேலும் மேலும் இன்பத்தைத் தரும். (குறள் 783)

அத்துடன் ஒரு நல்ல நட்பானது சேர்ந்து சிரித்து மகிழ்வதற்காக மாத்திரமன்று. நண்பன் தவறு செய்யும் நேரத்தில் அதைச் சுட்டிக்காட்டி தன்னைத் தவறான வழியிலிருந்து மீட்டு அற வழியைக் காட்டுவதுதான் உண்மையான நட்பாக அமைய முடியும். சிறந்த நட்பிற்கு இலக்கியங்களில் இருந்து பலரை உதாரணம் காட்ட முடியும்.

சில நேரங்களில் நேரடியாக எடுத்துச் சொல்ல முடியாதபோது எதிர்மறையாக மற்ற வருடைய தவற்றை எடுத்துக் காட்டித் திருத்தல் வேண்டும். உதாரணமாக ஒரு முறை அதியமான் அவனிலும் பார்க்க வலிமை பொருந்திய தொண்டைமானுடன் போருக்குச் சென்றபோது அதியமானைப் புகழ்வதுபோல் உன் படைகள் கூரிய ஆயுதங்களைக் கொண்டுள்ளன. ஆனால் உனது எதிரியோ மழுங்கிய படைக்கலங்களைக் கொண்டுள்ளான் என்று புகழ்வதுபோல் பூடகமாக எதிரி பல போர்கள் புரிந்து அவனது படைக்கலங்கள் கூர் மழுங்கிவிட்டன ஆனால் உனது படைகளுக்கோ போர் அனுபவம் கிடையாது. அதனால் அவர்களது ஆயுதங்கள் கூர்மையாக உள்ளன என்று எதிர்மறை யாக எடுத்துக் கூறி அதியமான் போர் செய்து தோல்வியடைவதிலிருந்து காப்பாற்றினான்.

நல்ல நேரங்களில் களிப்புறுவதுடன் தவறு செய்யும் நேரங்களில் இடித்துரைக்கும் நட்பே சிறந்தது. (குறள் 784)

வெறுமனே ஒன்று கூடி வீணான பேச்சில் நேரத்தைச் செலவிடாது இருவரும் ஒத்த அறிவுடன் நலன்தரும் விடயங்களைப் பற்றி ஆராய்ந்து கலந்துரையாடலே உண்யைான நட்பாகும் (குறள் 785)

வாழ்வின் ஒருவர் போலியானவற்றை எதிர் கொள்வது சாதாரணமானதன்று. அதேபோன்று நட்பிலும் போலியான நட்பு உண்டு. சிலர் நேரில் காணும்போது சிரித்துச் சிரித்துப் பேசுவர். எமது மகிழ்ச்சியே தமது மகிழ்ச்சி என்று பேசுவர். ஆனால் அடி மனதில் பொறாமை இருக்கும். இப்படியானவர்களின் நட்பை உண்மையான நட்பு என்று கொள்ள முடியாது. முகத்தினால் சிரித்து மகிழ்வது மட்டுமன்றி ஒருவரைக் காணும்போது உள்ளத்தினாலும் மகிழ்வெய்தி அவரை வரவேற்பதே உண்மையான நட்பு (குறள் 786)

நல்ல நண்பரை இன்னொரு வழியிலும் கண்டு கொள்ள முடியும். சிலர் ஒருவர் நல்ல நிலையில் இருக்கும்போது கூடிக்குலாவி மகிழ்வர். ஆனால் துன்பம் வந்துவிட்டால் உடனே ஓடி ஒழித்துக் கொள்வர். இவர்கள் உண்மையான நண்பர்களாக இருக்க முடியாது.

ஒருவர் தவறான வழியில் செல்லும்போது அதைத் தட்டிக் கேட்டு அதையும் மீறி அவர் துன்பத்திற்கு முகம் கொடுக்க நேரிடின் அத்துன்பத்தில் தானும் பங்கு கொள்பவனே உண்மையான நண்பனாக முடியும். (குறள் 787)

உண்மையான நண்பன் யாரெனில் ஒருவனது உடுப்பு கழன்று விழும் போது எவ்வாறு அவனது கரங்கள் சென்று அவனது துணி கீழே விழுந்துவிடாது தாங்கிக் கொள்கின்றனவோ அவ்வாறே துன்பம் நேரும் காலத்தில் எவரும் எதிர்பார்க்காமலே ஓடிச்சென்று உதவுபவன்தான் உண்மையான நண்பன் ஆவான். (குறள் 788)

சில நண்பர்கள் துன்பம் வரும்போது சில சமயங்களில் உதவுவார்கள். சில சமயங்களில் கை கழுவி விட்டுவிடுவார்கள். அப்படியின்றி துன்பம் நேரும் போதெல்லாம் மனம் தளராது தாங்கிக் கொள்பவன் யாரோ அவனே உண்மையான நண்பன் எனக் கொள்ளப்படுவான் (குறள் 789).

உண்மையான நண்பர்கள் தாம் நண்பருக்குச் செய்த உதவிகளையோ அன்றி தனக்கு நண்பர் செய்த உதவிகளையோ ஒப்பிட்டு இவர் எனக்கு இன்னது செய்தார் அத்துடன் அவருக்கு நான் இன்னது செய்தேன் என்று ஒப்பிட்டுப் பார்ப்பார் களேயானால் அவர்கள் உண்மையான நண்பர்களாகவோ இருக்க முடியாது (குறள் 790) உண்மையான நண்பர்களைத் தேர்ந் தெடுப்பதும், எவ்வகையான நண்பர்களை நாம் கொண்டிருக்கிறோம் எனவும் அறிந்து கொள்வது அவசியம் ஆகும்.